நட்பேடு

Magazin der Freunde ✲ Magazine of Friends

வைகாசி மடல்

ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் *e.V* , ஜெர்மனி

Our association Stuttgart Tamil Sangam e.V is a non-profit, non-sectarian, cultural and social organization with the aim of bringing together all those interested in the cultural and linguistic heritage of Tamil.

The main objective of our association is to promote the Tamil language, tradition and heritage in Germany. To achieve this, we embark on a journey by organizing and conducting various educational programs and traditional events.

In addition, we want to pass on our Tamil culture and customs to fellow human beings here in Germany and make them known to each other as well as invite them to work together. Our association will be a home for all cultures and provide everyone the opportunity to present their talents and thereby motivate others. Furthermore it is important that our children get to know the Tamil culture as well as our tradition.

Our association also offers the opportunity to network with other organizations, with the goal of exchanging ideas and learning new things from each other.

Contents	Page No.
குறள் பேசும் பாடம்	4
ஒளி பரவட்டும்	5
கதை கதையாம் காரணமாம்	6
ஊர்க்குருவி	7
ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V.	10
Yoga Performance	14
Historical Highlights	15
கிறுக்கல்கள்	17
ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V – தமிழ்ப் பள்ளி	18
STS STAR	20
வானம் போல மனம்	22
Cyber Security	23
அக்கம் பக்கம்	24
அறிந்ததில் அறியாதது	26
கீற்றல்கள்	27
Wildlife Wonders Around the World	28
Short and Easy German Sentences	29
பதில் தேடி விளையாடு	31
நிழற்பதிவு	32
நிழல் நெஞ்சங்கள்	33
Blockchain Revolution	34
சொல்லுங்கள் வெல்லுங்கள்!	36
இறுதியல்ல.., நிறைவு	37

குறள் 385
பால்: பொருட்பால்
இயல்: அரசியல்
அதிகாரம்: இறைமாட்சி

குறள் பேசும் பாடம்

> **இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த**
> **வகுத்தலும் வல்ல தரசு.**

விளக்கம்:
முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்

English Translation:
To receive, to preserve, to guard, and to distribute what has been guarded—whoever is capable of this is a king.

Deutsche übersetzung:
Empfangen, aufbewahren, hüten und das Behütete austeilen - wer dazu fähig ist, ist ein König.

ஒளி பரவட்டும்

அன்புடைய வாசகர்களே,

வைகாசி என்றாலே மனதில் ஒரு புத்துணர்வு பிறக்கிறது. இயற்கையைப் போலவே நம் மனமும் இந்த மாதத்தில் புதிதாய் மலரத் தொடங்குகிறது.

ஒவ்வொரு தலைமுறையும் தங்களுக்கென தனித்துவமான சவால்களை எதிர்கொள்கிறது. ஆனால் இன்று நாம் காணும் ஒரு அழகான உண்மை என்னவென்றால், மாற்றங்கள் எவ்வளவு வேகமாக நிகழ்ந்தாலும், அன்பும் நம்பிக்கையும் மனிதர்களை இணைக்கும் பாலமாகவே இருந்து வருகின்றது.

இன்றைய பெற்றோர்கள் உண்மையிலேயே சாதனையாளர்கள். குடும்பம், வேலை, பொறுப்புகள், எதிர்பார்ப்புகள் என பல திசைகளில் பயணித்தாலும், தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிரச் செய்வதற்காக அயராது உழைக்கிறார்கள். அவர்களின் முயற்சிகளும் தியாகங்களும் நாளைய தலைமுறையின் வேர்களாக மாறுகின்றன.

அதே நேரத்தில், நம் பிள்ளைகள் நமக்குக் கற்றுத் தருவதும் ஏராளம். அவர்களின் ஆர்வம், கேள்விகள், புதியவற்றை அறிந்துகொள்ளும் துடிப்பு, சிறிய விஷயங்களில்கூட மகிழ்ச்சியைக் கண்டுபிடிக்கும் திறன் , இவை அனைத்தும் வாழ்க்கையை புதிய பார்வையில் காண நம்மை ஊக்குவிக்கின்றது.

ஒரு குழந்தையின் வளர்ச்சி என்பது குடும்பத்தின் பயணம் மட்டும் அல்ல; அது ஒரு சமூகத்தின் பயணமும் கூட. நண்பர்கள், ஆசிரியர்கள், உறவுகள், சமூக உறுப்பினர்கள் என பலர் இணைந்து ஒரு குழந்தையின் உலகத்தை வடிவமைக்கிறார்கள். அதனால் தான் குழு உணர்வும், பரஸ்பர ஆதரவும், ஒன்றிணைந்து முன்னேறும் மனப்பான்மையும் இன்று மிகவும் அவசியமானதாகிறது.

இந்த வைகாசி மலர் நம்பிக்கையை கொண்டாடுகிறது. நாம் ஒருவருக்கொருவர் துணையாக நிற்கும் போது, சவால்கள் சுமைகளாகத் தெரியாது; அவை வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாறுகின்றன.

ஆர்வத்துடன் கற்போம்...
நம்பிக்கையுடன் முன்னேறுவோம்...
ஒன்றிணைந்து வளர்வோம்...

பதிப்பாளர்:
மஞ்சுபார்கவி சுகுமாரன்

கதை கதையாம் காரணமாம்



ஒரு அரசன் போட்டி ஒன்றை அறிவித்தான். கோட்டைக் கதவைக் கைகளால் திறந்து தள்ள வேண்டும். வெற்றி பெற்றால் நாட்டின் ஒரு பகுதி தானமாக வழங்கப்படும். தோற்றால் தோற்றவனின் கை வெட்டப்படும். மக்கள் பலவாறாக யோசித்து, பயந்து யாரும் போட்டியில் கலந்து கொள்ளவில்லை.

ஒரே ஒரு இளைஞன் மட்டும் போட்டியில் கலந்து கொள்ள முன் வந்தான். 'போட்டியில் தோற்று விட்டால் கைகளை வெட்டி விடுவார்கள். உன்னுடைய எதிர்காலம் என்னவாகும்?' என்றார்கள். அவன் சொன்னான், 'ஐயா வென்றால் நானும் ஒரு அரசன், தோற்றால் கைகள் தானே போகும். உயிரில்லையே!' என்று கூறி விட்டு கோட்டைக் கதவை இளைஞன் தள்ளினான். என்ன அதிசயம்! கதவு சட்டெனத் திறந்து கொண்டது. ஏனென்றால், கோட்டைக் கதவுகளில் தாழ்ப்பாள் போடப்படவில்லை. திறந்து தான் இருந்தது.

பல பேர் இப்படித் தான் இருக்கிறார்கள். தோற்று விடுவோமோ, எதையாவது, இழந்து விடுவோமோ என்று எதற்கும் முயற்சிக்காமலேயே விட்டு விடுகிறார்கள். பலர் தோல்வியை முன்கூட்டியே நினைத்து முயற்சிக்கவே தயங்குகிறார்கள். ஆனால் முயற்சி செய்தால்தான் வெற்றி வாய்ப்பு கிடைக்கும். அந்த இளைஞன் போல துணிவுடன் முன்னேறினால், பல தடைகள் உண்மையில் தடைகளே அல்ல என்பதை அறியலாம்.

பலர் தோல்வியை முன்கூட்டியே நினைத்து முயற்சிக்கவே தயங்குகிறார்கள். ஆனால் முயற்சி செய்தால்தான் வெற்றி வாய்ப்பு கிடைக்கும். அந்த இளைஞன் போல துணிவுடன் முன்னேறினால், பல தடைகள் உண்மையில் தடைகளே அல்ல என்பதை அறியலாம்.

ஊர்க்குருவி -10
எதிர்பார்ப்பு

மாற்றம் தேவை
மாற்றம் தேவை என
மக்கள் புரட்சி
மன்னர்களை வீழ்த்தியது !
மனம் இருந்தால் ஒரு நாள்
மலரும் நல்ல திருநாள்
என்றிருந்த மாந்தர்
எண்ணம் மேலோங்கியது !!
தெரிந்து உதவியோர்
தெளிந்த உறுதியோர்
துளிர்த்த மழலையர்
தளர்ந்த மேனியர்
இளைய வயதினர்
இளைத்த மனதினர்
எதிலும் புதியதோர்
எழுச்சி மிகுந்ததோர்
முரசு முழங்கிடவே
அரசு படைத்திட்டோம் !!!

நிற்க !

காலம் கடந்தும் நிற்கின்றான்
கல்லணை மதகின்
கம்பீரத்தில் “கரிகாலன்” !
இயற்கைப் பேரிடர்
இம்மியும் அசைக்கா
தஞ்சை கோபுரத்தின்
தரத்தில் “ராஜராஜன்” !
சரணடைந்த உயிரைக் காக்க
தன் உடலறிந்து கொடுத்த “சிபி”!
சம நீதி மன்னனுக்கு உயிரென
தன் சமர்த்த மகனை தேரேற்றிய “மனு” !
எண்ணற்ற உதாரணங்கள்
எம்மண்ணில் முன் உண்டு !!!

என்றோ நடந்த இவையெல்லாம்
இன்றோ சாத்தியமில்லையென
யாரேனும் பொய்யுரைத்தால்
யாங்கும் தேடாதே
தலை திருப்பி மேலே பார்
தரணி போற்றும் காமராசன்
எளிய புன்னகையில்
எப்போதும் உடன் இருப்பான் !

தமிழகத்தின் முதல்வரான போதிலும்
ஒரு போர்வையை
ஒரு மின்விசிறியை
ஒரு தண்ணீர் குழாயை
எல்லோருக்கும் கிடைக்கும் போதே
என் தாய்க்கும் கிடைக்குமென்றான்!
நாணயமாய் ஆண்டவனோ
நாலு பேர் சுமக்கையிலே
முன்னூறு ரூபாயே
மொத்தமாய் வைத்திருந்தான்!
இருப்பினும் எம்மனதில்
இலச்சினையாய் ஒளிர்கின்றான் !

இன்றைய தமிழகத்தின்
இணையற்ற கட்டுமானங்கள்
சில பல நூற்றாண்டு
சிவகாமி மகனை
நினைவிருந்தும் அடையாளங்கள் !

உன்னாலும் முடியும்
உண்மையாய் முயன்றால்
மக்களின் மனதினிலே
மக்காமல் ஒரு கோட்டை
அழியாமல் நிறுவ
அச்சாரமிடு இன்றே !
வெறும் சொல்லில் அல்ல
வெல்லும் செயலால் நன்றே!

நீண்ட காலம் பூக்காமல்
நிம்மதியிழந்த ஏழிலைப்பாலையாய்
நல்லவன் தீண்டவே தவம் இருக்கின்றாள்
நான்குயுகமும் வாழும் என் தமிழன்னை !!!

பூக்கவே செய்திடு
புண்ணியம் ஓங்கட்டும் !!

என்றும் அன்புடன்

மெய்யரசு நடராஜன்

குறிப்பு:

·சிவகாமி : காமராஜரின் தாயார்

·ஏழிலைப்பாலை : பெண்ணின் அணுக்கத்தால் (தீண்டலால்) மலரும் மரம் என "வேள்பாரி" நாவலில் குறிப்பிடப்பட்ட மரம் (கற்பனையாகவும் இருக்கலாம்)

"We believe in strong partnerships, not just with patients, but with people who care about each other."

WHY US?

- Germany's first AI-powered dental monitoring system.
- 3D scans & digital diagnostics for precision and clarity.
- In-house dental lab – faster, more accurate results.
- Multilingual, culturally aware team.
- Personal consultation & transparent treatment – always.

WEISS32

PLATINUM SPONSOR ★★★★★

WEISS32 ZAHNZENTRUM IS A LEADING DENTAL CENTER IN STUTTGART, COMMITTED TO PROVIDING WORLD-CLASS DENTAL CARE, ADVANCED TREATMENTS, AND RADIANT SMILES.WE COMBINE TECHNOLOGY, EXPERTISE AND EMPATHY TO PROVIDE FAMILIES WITH CARE BUILT ON TRUST, TRANSPARENCY, AND COMFORT.

+49 (0) 711 / 76 02 69 | info@weiss32.de | www.weiss32.de

ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் E.V.

தமிழ்ப் புத்தாண்டு விழா 2026

ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V. சார்பில் நடைபெற்ற தமிழ்ப்புத்தாண்டு விழா, தமிழர் பண்பாட்டு பெருமையையும், சமூக ஒற்றுமையையும் பிரதிபலிக்கும் வகையில் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.
210-க்கும் மேற்பட்டோர், குழந்தைகள் உட்பட, கலந்து கொண்டு இந்த விழாவை உறவுகள் இணையும் இனிய சமூக நிகழ்வாக மாற்றினர்.

இனிய தொடக்கம்

விழா, பொதுச் செயலாளர் வழங்கிய அன்பான வரவேற்புரையுடன் தொடங்கியது.
அதனைத் தொடர்ந்து, நிதிக்குழு உறுப்பினர்கள் சங்க உறுப்பினர்களுக்கான நன்மைகள் மற்றும் உறுப்பினர் சேர்க்கையின் பயன்கள் குறித்து தெளிவான விளக்கங்களை வழங்கினர். இது நிகழ்விற்கு தகவல் நிறைந்த பயனுள்ள தொடக்கமாக அமைந்தது.

சிறப்பு விருந்தினர்கள்

இந்திய கூட்டமைப்பு ஜெர்மனி (India Federation of Germany) அமைப்பின் முக்கிய பிரதிநிதிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மேடையில் கௌரவிக்கப்பட்டனர்.
அவர்களின் வருகை நிகழ்விற்கு மேலும் பெருமையையும் சிறப்பையும் சேர்த்தது. நிர்வாகக் குழு அவர்களை அன்புடன் வரவேற்று மரியாதை செலுத்தியது.

ஆதரவாளர்களுக்கு மரியாதை :
நிகழ்வின் வெற்றிக்கு துணைநின்ற ஆதரவாளர்கள் சிறப்பாக கௌரவிக்கப்பட்டனர்.

மனிதநேயத்தின் உயர்ந்த தருணம்

இந்த விழாவின் மிகவும் அர்த்தமிக்க அம்சங்களில் ஒன்றாக, DKMS Deutschland அமைப்பினர் நடத்திய Swab Sample Registration Campaign அமைந்தது.
உயிர்காக்கும் நோக்கத்துடன் நடைபெற்ற இந்த முயற்சிக்கு தமிழ் சமூகத்தினர் உற்சாகமான ஆதரவை வழங்கினர். பலர் தங்களது மாதிரிகளை வழங்கி பதிவு செய்தனர். இந்த மனிதநேயப் பங்களிப்பு விழாவின் மதிப்பை மேலும் உயர்த்தியது.

Platinum Sponsors

- ExpatVantage
- Deniz Ünver Real Estate Investments
- Weiss32

ஆகிய நிறுவனங்களுக்கு மேடை நேரம் வழங்கப்பட்டு, அவர்களின் ஆதரவிற்காக நன்றி தெரிவிக்கப்பட்டது.
மேலும், Event Based Silver Sponsor ஆன Budget Basket மளிகைக் கடை தனது சிறப்பு பங்களிப்பின் மூலம் நிகழ்வை வளப்படுத்தியது.
அனைத்து ஆதரவாளர்களும் நிர்வாகக் குழுவினரால் நினைவுப்பரிசுகளுடன் கௌரவிக்கப்பட்டனர்.

சுவையான விருந்தோம்பல்

Athidhi Restaurant வழங்கிய மதிய உணவு அனைவராலும் பெரிதும் பாராட்டப்பட்டது.
சுவை, தரம் மற்றும் அன்பான விருந்தோம்பல் கலந்து கொண்டவர்களுக்கு இனிய அனுபவத்தை வழங்கியது.
மாலையில் வழங்கப்பட்ட சிற்றுண்டியும் அனைவருக்கும் ஓய்வும் உற்சாகமும் அளித்தது.

கலைநிகழ்ச்சிகளின் விருந்து

விழாவின் முக்கிய அம்சமாக பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

✨ பட்டிமன்றம்
✨ சிலம்பாட்டம்
✨ கரகாட்டம்
✨ மயிலாட்டம்
✨ குழந்தைகளின் நடன நிகழ்ச்சிகள்
✨ பெரியவர்களின் நடனங்கள்
✨ வினாடி வினா நிகழ்ச்சிகள்

இந்த நிகழ்ச்சிகள் தமிழ்க் கலாசாரத்தின் செழுமையையும் சமூக உறுப்பினர்களின் திறமைகளையும் அழகாக வெளிப்படுத்தின.

ஆரோக்கியத்திற்கு ஊக்கம்

நிகழ்வின் நிறைவாக, Health & Fitness குழு நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
இது சமூகத்தில் ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் சிறந்த முயற்சியாக அமைந்தது.

DENİZ
ÜNVER
REAL ESTATE INVESTMENTS
BOOK YOUR FREE
APPOINTMENT TODAY!

EXPAT
VANTAGE

நன்றியுரை

இந்த தமிழ்ப்புத்தாண்டு விழாவை மாபெரும் வெற்றியாக மாற்றிய

- பங்கேற்பாளர்கள்
- கலைஞர்கள்
- தன்னார்வத் தொண்டர்கள்
- ஆதரவாளர்கள்
- சிறப்பு விருந்தினர்கள்
- நலன்விரும்பிகள்

அனைவருக்கும் ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V. இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

உங்களின் ஒற்றுமை, அன்பு, உற்சாகமான பங்கேற்பு ஆகியவை இந்த விழாவை அனைவரும் நினைவில் கொள்ளும் மறக்கமுடியாத நிகழ்வாக மாற்றியுள்ளது.

தமிழும் தமிழரும் இணையும் இனிய தருணங்கள் தொடரட்டும்! ✨🌺🙏

YOGA PERFORMANCE

A JOURNEY OF STRENGTH, BALANCE & HARMONY

The students of Sukha Yoga Nilyam a yoga school in Ludwigsburg founded by Anusha Sridaran (Member of STS) performed a brilliant Yoga Dance Fusion at the Tamil New Year festival organized by our Stuttgart Tamil Sangam in April 2026.

The kids performed in perfect harmony, effectively demonstrating their years of Hatha Yoga practice on stage.

This article lists out the yoga asanas they performed during the event:

1.Chandra Namaskar
2.Kaali Asana
3.Garudasana
4.Chakrasana
5.Vrkshasana
6.Rajabujankasana

Great way and Best wishes to Tanmay, Sharvesh,Aradhya, Anaisha, Parthiv, Shanvi.

This talented performance showcases their dedication and unique skills in Yoga.

-Anusha Sridaran

Historical Highlights

The Country That Ceased To Exist Before Its Coffee Arrived

Coffee, the muddy drink that fuels your day, brought hope to medieval Europe. Its rise in coffee houses helped Europe enter the age of enlightenment, highlighting coffee's historical significance and inspiring curiosity about its influence.

East Germany planted the seeds of a coffee empire in Vietnam but by the harvest the country was gone.

How would you pay for a cup of coffee?
Of course, with your shiny credit card.
But did you know that in history, some countries paid for coffee beans with weapons or investments, influencing international relations? For example, a country once invested millions of dollars in coffee plantations to secure trade alliances, even though it eventually ceased to exist to receive the delivery.

Coffee spread to every nook and corner of Europe and became a staple part of breakfast, lunch, and even dinner. After World War II, Germany was divided into East and West Germany. West Germans had access to the capitalist market, which was flush with goods. At the same time, its communist counterpart, East Germany, had limited offerings on its à la carte menu.

East Germany invested several million dollars in the coffee plantation, helped construct a hydroelectric plant, and even built homes for the 10,000 employees who would work on the plantation.

When the coffee harvest failed in Brazil in 1980, it had a devastating effect on coffee prices worldwide. The domestic price increase in coffee was causing unrest in East Germany. With limited ties to the outside world due to the Iron Curtain, East Germany, part of the USSR, sought potential coffee exporters.

East Germany found potential coffee exporters in Africa and exchanged weapons for coffee. Considering long-term commitment, East Germany established a collaboration with Vietnam. The Vietnamese hills were ideal for growing coffee but lacked investment.

It would take eight years for coffee plants to yield coffee beans. By the time the coffee beans were ready, East Germany had merged with West Germany. With the seed investor (no pun intended) out of the equation, Vietnam began exporting excess coffee to other potential buyers, leading to a sudden drop in coffee prices.

Today, Vietnam is the second-largest coffee producer. Unified Germany imports most of its coffee from Vietnam. Germany now pays market price for the coffee they invested millions of dollars to grow.

Sometimes I wonder how funny geopolitics is.

— **Karthick Nambi**

கிறுக்கல்கள்



1. உன் மனதை பெரும்பான்மையுடன்
வென்ற என்னை, ஏனோ உன்னை ஆட்சி
செய்ய அழைக்த மறுக்கிறாய்...
ஆளுநரைப் போலவே!

---

2. என் நெஞ்சே...

என்னை மறக்கவும், என் நினைவுகளை
விட்டு விலகவும்
அவள் மனம் அவளுக்கு help செய்கிறது.
நீ மட்டும் ஏன் அவள் நினைவுகளை மறக்க
முடியாமல் தினமும் என்னை
காயப்படுத்துகிறாய்?

---

3. காலை எழுந்ததும் காபி குடிப்பதில்லை...
ஆனால் உன் நினைவுகளை தினமும்
குடித்துக் கொண்டே இருக்கிறேன்...
சர்க்கரை இல்லாமல்... அதற்கும்
பழகிவிட்டது. 💔



-Ramkumar Ramamoorthy

Stuttgart Tamil Sangam e.V. – தமிழ்ப் பள்ளி

தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பும் பதிய மாணவர்களை எங்கள் கல்விக் குடும்பத்திற்கு **அன்புடன் வரவேற்கிறோம்.**



Tamil School Registration Process:

Step 1: Online Sign-Up (இணையப் பதிவு)

எங்களது பதிவு இணையத்திற்கு சென்று தேவையான விவரங்களைப் பூர்த்தி செய்யவும். பதிவு செய்யும் போது தேவையான அனைத்து சான்றுகளையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பதிவு இணைப்பு:
https://stuttgarttamilsangam.com/STSangam/studentSignIn

Step 2: Trial Classes (மாதிரி வகுப்புகள்)

உங்கள் பதிவுக்குப் பிறகு தமிழ்ப் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்கள் உங்களைத் தொடர்பு கொண்டு, மாதிரி வகுப்புகளுக்கான தேதிகளை அறிவிப்பார்கள். உங்கள் குழந்தை கற்றல் சூழலை அனுபவிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பு.

Step 3: Final Enrollment (இறுதிச் சேர்க்கை)

மாதிரி வகுப்புகளுக்குப் பிறகு திருப்தி இருந்தால், மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள (TVA) அதிகாரப்பூர்வமாக பள்ளியில் சேர்க்கப்படுவார்கள். இதனால், உங்கள் குழந்தையின் தமிழ் கற்றல் பயணம் தொடங்கும்.

நம் தலைமுறைகள் தமிழுடன் தழைக்கட்டும்!

EXPAT VANTAGE

PLATINUM SPONSER

You want to secure the financial future of your family here in Germany?

Expat Vantage specializes in helping expats build and protect their wealth with clarity and structure.

You get a financial framework that aligns your insurance, retirement planning, and investments including access to high-quality off-market opportunities into one coherent strategy, while helping you optimize your tax position.

A structured approach that brings clarity, confidence, and long-term security.

WHY US?

Tax optimization
on average, you can save up to €8,000 in taxes

Investments
you gain access to exclusive off-market opportunities not typically available to the public

Insurance solutions
tailored to fit your overall financial strategy

Experience
you benefit from over 10 years in the German market

Clarity
the entire process is handled in English

Freedom
your consultation is free of charge

+49 (0) 151 12345678

info@expatvantage.de

www.expatvantage.de

STS STAR

Sai Vishaakan

Sai Vishaakan belongs to the second group

Some children walk into a room and instantly **capture your attention.**
Others quietly find a place in your heart without even trying.

When I spoke with Priya and Vignesh about their little one, I didn't hear stories filled with grand achievements or extraordinary milestones. Instead, I discovered a child whose quiet curiosity, gentle nature, and unique way of seeing the world make him truly special.

Every memory they shared painted the picture of a boy who observes more than he speaks, notices more than he shows, and learns more than people often realise.

A Little Explorer at Heart

For Sai, the world is full of things waiting to be discovered.
He loves being outdoors, watching, exploring, and making sense of everything around him.
While others may rush past the little details, Sai often pauses long enough to notice them.
There is something beautiful about the way he learns, not through pressure or instruction, but through genuine curiosity.

Music That Feels Like Home

One of the sweetest things I learned about Sai is his love for music.
Hand him his xylophone and ask someone to sing, and he is instantly in his happy place.
His current favourites are ***Pavazhamalli*** and ***Ranjitham***.
Yet among all the music he enjoys, nothing seems to comfort him quite like his mother's voice.
Her songs have a way of calming him, reassuring him, and making everything feel right again.
For Sai, music is not simply something he listens to.
It is a feeling of home.

A Mind That Makes Beautiful Connections

Priya and Vignesh shared a story that still makes them smile. When children at school were learning reverse alphabet order, Sai quietly carried the idea home and applied it in his own way. Before long, he had begun reverse counting numbers on his own. It was one of those simple childhood moments that parents never forget, not because someone taught him, but because he made the connection himself.

That natural ability to observe, think, and apply ideas in his own way is a small glimpse into the wonderful way his mind works.

Bus Rides, Spider-Man & Simple Joys

Like every child, Sai has his own collection of favourite things.

- Bus rides bring him excitement.
- Spider-Man makes him feel like a superhero.
- Watching series in different languages captures his attention and imagination.

The beauty of childhood often lives in these little moments, and Sai seems to embrace every one of them wholeheratedly.

A Heart Full of Love

What touched me most was hearing about the warmth with which he loves the people around him. Sai is calm, obedient, and deeply connected to those closest to him.
He listens carefully, understands quietly, and carries a gentle affection that is felt by everyone who spends time with him.

A Beautiful Team Behind Him

Every happy child has a story behind them.
In Sai's story, Priya and Vignesh play that role beautifully. Their love, patience, encouragement, and constant support can be felt in every story they shared. They celebrate his small victories, nurture his interests, and allow him the freedom to grow into his own person.
Perhaps that is why Sai carries such quiet confidence and contentment wherever he goes.

> *"Behind every happy child is a family that believes, supports, and shows up with love. That is exactly what Sai has."*

As they prepare for a new chapter in India, there is a special excitement waiting for Sai— the joy of being closer to his beloved grandparents. While distances may change, the memories, smiles, and warmth he has shared with our community will continue to stay with us.
Some children leave footprints on the ground; others leave them quietly in people's hearts.
Sai has certainly done that.

Here's to more adventures, more discoveries, and a future as bright as your curiosity, Sai!

வானம் போல மனம்

மேகங்கள் போல
நம் எண்ணங்கள்
தோன்றும் மறையும்

கருமேகங்களும் சூழும்
வெண்மேகங்களும் விரியும்!

சில நேரங்களில்
மேகங்கள் இன்றி
தெளிவான வானத்தில்
அந்த கதிரவனாய்
மிளிர்வோம் !

நம் மேகமெனும்
எண்ணங்களில்
ஓடி ஓடி மறையாமல்
நமக்குள் உள்ள ஒளிக்கதிரை
அரவணைப்போம்!

கார்மேகங்கள் சூழ்ந்தாலும்
வானவில்லாய் மலர்வோம் !

கருமேகங்களை கடந்து
மின்னலாய் பிளந்தெழுவோம் !

கண்ணீரே மழை ஆனாலும்
கருமேகங்களை உடைப்போம் !

பஞ்சாய் பறக்கும்
வெண்மேகங்களை
அணைப்போம்!

சூரியன் போல
பிரகாசிக்க முடியாமல்
போனாலும்
விண்மீனாய் மின்னுவோம்!

முழுநிலவு போல
பிரகாசிக்க முடியாமல்
போனாலும்
அரை நிலவாக
அழகாய் மிளிர்வோம்!

- **சுபாஷினி**

CYBER SECURITY

3-2-1 backup strategy உத்தியைக் கற்றுக்கொண்ட பிறகு, வள்ளிக்கு Cyber Security
தலைப்புகளில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.

ஒரு நாள், வள்ளியும் அவளுடைய அம்மாவும் "Stuttgart-Weilimdorf" ல் உள்ள ஏரிக்கு சிறிய
நடைப்பயிற்சிக்குச் சென்றனர். அவர்கள் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தபோது,
திடீரென்று அவளுடைய அம்மாவுக்கு " Amazon" இணையதளத்திலிருந்து 100 யூரோ
பரிவர்த்தனைக்கான OTP செய்தி வந்தது. அவர் எதுவும் வாங்காததால், அந்த OTP செய்தியைக் கண்டு அவளுடைய அம்மா அதிர்ச்சியடைந்தார். தன் அம்மாவின் முகத்தைப் பார்த்த வள்ளி மிகவும் குழப்பமடைந்தாள்... யாரோ ஒருவர் அவளுடைய Amazon கணக்கை ஹேக் செய்து, 100 யூரோவிற்கு ஒரு கைப்பையை ஆர்டர் செய்திருக்கிறார்கள். இத்தகைய ஆர்டர்களுக்கு OTP கட்டாயமாகத் தேவைப்படுவதால், அந்த ஆர்டர் முழுமையடையாமல் தோல்வியடைந்தது.

வள்ளியின் அம்மா ஒவ்வொரு ஆர்டருக்கும் 'இரு காரணி அங்கீகாரத்தை' (Two-Factor Authentication) இயக்கி வைத்திருந்ததே, அவர் பணத்தை இழக்காமல் தப்பிக்கக் காரணமாக அமைந்தது.

Two-factor authentication (2FA) is a security method that requires two different forms of proof to log in, moving beyond just a password to prevent unauthorized access. It acts like a "double lock" on your account, combining something you know (password) with something you have (phone/security key) or are (fingerprint). It is essential because it adds a vital second layer of security, ensuring that even if hackers steal your password, they cannot access your account.

Key Reasons Why 2FA is Important
- Mitigates Stolen Passwords
- Defends Against Phishing
- Protects Sensitive Data
- Active Security

How it Works in Simple Terms
- Enter Password: You enter your password as usual (something you know).
- Second Verification: The system prompts you for a second, separate piece of evidence, such as:
- A numeric code sent via SMS or email.
- A code generated by an app like Google Authenticator or Authy (something you have).
- A "push notification" on your phone asking you to approve the login.
- A fingerprint or facial scan (something you are)

Why Use It?
Even if a hacker steals your password, they cannot enter the account because they don't have your physical device or biometric data. It is a critical defense against hacking, phishing, and identity theft.

-Veera

அக்கம் பக்கம்

"சுவலி" திட்டம்
https://suvali.tamilheritage.org/

வணக்கம்.

ஓலைச்சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கியங்கள் 16ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் யோகானஸ் குட்டன்பர்க் அவர்களால் அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தாள்களில் அச்சு வடிவம் பெறத் தொடங்கின. மிகக் குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி 19ஆம் நூற்றாண்டு 20ஆம் நூற்றாண்டு ஆகிய காலகட்டங்கள் தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளில் இருந்து தாள் அச்சு நூலாக பரிணாம மாற்றம் அடைந்த முக்கியமான ஒரு காலமாகும்.

அக்காலகட்டத்தில் தமிழறிஞர்கள் மட்டுமன்றி ஐரோப்பிய அறிஞர்களின் முயற்சியினாலும் பல தமிழ் நூல்கள் அச்சு வடிவில் வெளிவரத் தொடங்கின. தமிழில் எழுதப்பட்ட அனைத்து நூல்களும் அச்சு வடிவம் பெறப்பட்டு விட்டதா என்றால் "இல்லை" என்பது தான் அதற்கான விடையாக அமையும்.

ஏனெனில் தொடக்க காலத்தில் ஓலைச்சுவடிகளில் இருந்த நூல்களை அச்சு வடிவிற்குக் கொண்டு வர முயற்சி செய்தவர்களது எண்ணிக்கை குறைவு. அதற்கும் மேலாக பொருளாதார பலம் பொருந்திய சூழலில் மட்டுமே இதனை சாத்தியப்படுத்த முடிந்தது. ஆகவே சில நூல்கள் அச்சு வடிவம் கண்டன, பல நூல்கள் மறைந்து போயின. இப்படி தமிழ் மக்கள் இழந்த நூல்கள் ஏராளம்.

அச்சு வடிவில் வெளிவந்து நூல்களை கைகளில் எடுத்து வாசித்த அனுபவத்திலிருந்து 21ஆம் நூற்றாண்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.

21ஆம் நூற்றாண்டில் கணினி அது தொடர்பான தொழில்நுட்ப வளர்ச்சி விரிவடைந்த காரணத்தினால் மடிக்கணினி, செல்பேசி போன்ற எளிமையான கருவிகளில் நூல்களை வாசிக்கும் வாய்ப்பினை அனைத்து தரப்பினருக்கும் வழங்கியது. பொருளாதாரம் இதற்கு ஒரு தடையல்ல என்ற வகையில் எல்லோரும் நூல்களை வாசிக்கக் கூடிய வாய்ப்பு இந்தக் கணினி யுகத்தில் அமைந்தது. அதன் அடிப்படையில் நூல்களை வாசிப்பது என்பதைக் கடந்து ஒலி நூல்களாகக் கேட்டு பயன்பெறும் வாய்ப்பினைத் தொழில்நுட்பம் வழங்கி இருக்கின்றது.
இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு தொடர்ந்து தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி வருகின்றோம். அத்தகைய ஒரு பணியாக அமைவது தான் நமது ஏராளமான திட்டங்களில் ஒன்றான "சுவலி" திட்டம் (https://suvali.tamilheritage.org/).

இத்திட்டத்தின் வழி தமிழ்நாடு அரசினால் நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழ் நூல்களைத் தன்னார்வலர்கள் வாசித்து அந்த நூல்களுக்கு மக்களிடையே அறிமுகத்தை வழங்கக்கூடிய நல் வாய்ப்பினைத் தமிழ் மரபு அறக்கட்டளை வழங்கி வருகின்றோம்.

மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக பார்வைத் திறன் அற்றவர்கள் இத்தகைய ஒலி நூல்களைக் கேட்டு பயன்பெற முடிகின்றது. நீண்ட தூர வாகனப் பயணத்தில் இருப்பவர்கள் இத்தகைய நூல்களைக் கேட்டுக்கொண்டே நெடுதூர பயணத்தை எளிதாக்கலாம். சாலையில் நடை பயிற்சி செய்பவர்கள் காலையில் தங்கள் காதுகளில் ஒலிக்கருவியை இணைத்துக் கொண்டு இந்த ஒலி நூல்களைக் கேட்டு மகிழ்ந்தவாறு தங்கள் உடற்பயிற்சியை மேற்கொள்ளலாம். வீட்டில் இருந்து கொண்டு மாலை நேரங்களில் தேநீரையும் காப்பியையும் பலகாரங்களையும் சுவைத்துக் கொண்டு இந்த ஒலி நூல்களை கேட்டு பயன்பெறலாம். இப்படி பல்வேறு வகையில் ஒலி நூல்கள் பொதுமக்களுக்கு பயன் தரக்கூடியது.

தமிழ் மரபு அறக்கட்டளையின் பணிகள் ஒவ்வொன்றும் ஆய்வாளர்களுக்கும் ஆய்வின் மீது நாட்டமுள்ள பொதுமக்களுக்கும் மிகுந்த பயனளிக்கக் கூடியவை. அனைவரும் நமது "சுவலி" வலைப்பக்கத்தில் வெளியிடப்படுகின்ற ஒலி நூல்களை கேட்டு பயன்பெற வேண்டும் என்பதே தமிழ் மரபு அறக்கட்டளையின் எதிர்பார்ப்பு.

தமிழால் இணைவோம்!

அன்புடன்
முனைவர் க. சுபாஷிணி
தலைவர்
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

அறிந்ததில் அறியாதது

பழமொழி:

"மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்."

தவறான புரிதல்:

ஒரு தவறை மாமியார் செய்யும் போது அது பெரிதாகக் கருதப்படுவதில்லை.ஆனால், வீட்டுக்கு வந்த மருமகள் அதே தவறைச் செய்துவிட்டால், அதை மாமியார் பெரிதுபடுத்திவிடுகிறார் என்று பொருள் வருகிறது,

உண்மையான பழமொழி:

மாமியார் உழைத்தால் மண்ணுக்கு உரம், மருமகளும் உழைத்தால் பொன்னுக்கு உரம்.

உண்மையான பொருள்:

விவசாயி வீட்டில் மாமியாரும் மருமகளும் சேர்ந்து நிலத்தில் உழைத்தால் பொன்னும், பொருளும் சேரும் என்பது அர்த்தம்.

வாசகர் மடல்கள்

அனைத்து பக்கங்களும் அருமை👌👌 ஊர் குருவி மிக அருமை👍👍💐💐 இதை உருவாக்கிய அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்💐💐

-Roshini Priya

I have just viewed the Magazine and I have to say, it is wonderful. The articles super informative. Covering everything from fashion to Culture. Plus the visuals are stunning._ it is a real treat for the eyes😍 Great efforts invested.Kudos🙂

-Lokesh

இதழின் வடிவமைப்பும் உள்ளடக்கமும் வாசகர்களை மிகவும் ஈர்க்கும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. ஆசிரியர் குழுவினருக்கும், அனைத்து பங்களிப்பாளர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும். மேலும் பல சிறப்பான பதிப்புகளை வெளியிட எனது நல்வாழ்த்துக்கள்!

-ரேவதி

Congratulations on a fantastic edition! The magazine reflects dedication, creativity, and excellence.

-Vivekanand

Excellent magazine with informative and engaging content. Keep up the great work!

-Geetha

மாதம் ஒரு சொல்

அவிர்மை

radiance or manifestation

கீற்றல்கள்

-Shreya Muthiah
Nikilan
Aadhya
Nikilan
Sarvin
Chozhaman
Viyan

WILDLIFE WONDERS AROUND THE WORLD

– By Jaithik Avinash, Junior Wildlife Reporter

Did You Know? – Amazing Birds Edition!

This month, we are exploring some of the most unusual birds from around the world! Get ready to meet birds that can copy sounds, dive underwater, and even birds that sadly disappeared forever.



LYREBIRD ♫

The lyrebird is known as the world's best copycat bird!

- It can imitate sounds like camera clicks, chainsaws, alarms, and even other birds.
- Male lyrebirds have beautiful tail feathers shaped like a musical lyre.
- They live in the forests of Australia.
- Sometimes people think they hear machines in the forest — but it's just a lyrebird!

GREBES

Grebes are birds that are amazing swimmers and dancers!

- They can run across water during special mating dances.
- Grebes build floating nests on lakes and ponds.
- Their legs are placed far back on their bodies, making them excellent swimmers but funny walkers!
- Baby grebes sometimes ride on their parents' backs.

AMAZING FACT!

Grebes can dive deep underwater to catch fish and stay under for almost a minute!

CORMORANTS

Cormorants are expert fishing birds!

- They dive underwater to catch fish with their sharp beaks.
- Unlike many birds, their feathers are not fully waterproof, so they often stand with wings spread open to dry.
- Some fishermen in Asia once trained cormorants to help catch fish!
- They can swim very deep underwater.

DODO

The dodo is one of the most famous extinct birds.

- Dodos lived on the island of Mauritius.
- They could not fly because they had no natural predators.
- Sailors and introduced animals hunted them, and the dodo disappeared forever around 300 years ago.
- Today, the dodo reminds us why protecting animals is important.



GREAT AUK

The great auk looked a bit like a penguin — but it lived in the North Atlantic Ocean!

- Great auks could not fly, but they were excellent swimmers.
- They used their wings like flippers underwater.
- People hunted them heavily for feathers, eggs, and meat.
- The last known great auks disappeared in the 1800s.

Became extinct in 1844

★ FUN BIRD CHALLENGE!

If you could have one bird superpower, what would it be?

1. Copy sounds like a lyrebird?
2. Swim underwater like a cormorant?
3. Dance on water like a grebe?

SHORT AND EASY GERMAN SENTENCES

1	Willst du einen Kaffee?	*Do you want a coffee?*
2	Ich habe kein Auto.	*I don't have a car.*
3	Ich bin müde und gehe schlafen.	*I'm tired and going to sleep.*
4	Ich lerne Deutsch.	*I'm learning German.*
5	Mein Handy ist kaputt.	*My phone is broken.*
6	Das ist eine gute Idee!	*That's a good idea!*
7	Komm mit mir!	*Come with me!*
8	Ich bin allein.	*I am alone.*
9	Willkommen zu Hause!	*Welcome home!*
10	Schön, dich zu sehen!	*Nice to see you!*

-Guruprasanth Meyyarasu

SHAPING YOUR FUTURE
DENIZ ÜNVER
REAL ESTATE INVESTMENTS
TRUSTED GUIDANCE. SMART INVESTMENTS. SECURE FUTURE.
Ready to invest in German real estate but not sure where to start?
Deniz Ünver Real Estate Investments makes the process simple, transparent, and fully guided, every step of the way.
WHAT WE OFFER?
1. Understand your financial goals and create a plan that fits you.
2. Share expert insights to help you invest with confidence.
3. Build a tailored strategy to find the right property.
4. Support you through every step from paperwork to purchase.
5. Stay connected even after your investment for long-term success.
PLATINUM SPONSOR
DON'T HESITATE TO CONTACT
Scan the WhatsApp QR code or message +49 176 21476492 to discuss your investment plans and discover how Deniz Ünver Real Estate Investments can help you build a secure and prosperous future.
TRANSPARENT PROCESS
TRUSTED EXPERTISE
QUALITY PROPERTIES
SECURE FUTURE

பதில் தேடி விளையாடு

★ சிந்தியுங்கள்! தேடுங்கள்! கண்டுபிடியுங்கள்! ★

1 கேள்வி 1

நான் ஒடிக்கொண்டே
இருப்பேன்,
ஆனால் எங்கும்
செல்ல மாட்டேன்.

என்னைப் பிடிக்க முடியாது,
ஆனால் எல்லோரும் என்னைப்
பயன்படுத்துவார்கள்.

நான் யார்?

2 கேள்வி 2

எனக்கு கண்கள் உண்டு,
ஆனால் பார்க்க முடியாது.

எனக்கு வாய் உண்டு,
ஆனால் பேச முடியாது.

என்னை இல்லாமல்
பல ஆடைகள்
உருவாகாது.

நான் யார்?

3 கேள்வி 3

எவ்வளவு எடுத்தாலும்
நான் பெரிதாகிக்
கொண்டே இருப்பேன்.

என்னை உருவாக்குவது
எளிது, ஆனால்
நிரப்புவது கடினம்.

நான் யார்?

4 கேள்வி 4

நான் பிறக்கும் போது
உயரமாக இருப்பேன்.

வயதாக வயதாக
குட்டியாகி விடுவேன்.

நான் யார்?

5 கேள்வி 5

என்னை உடைக்காமல்
என்னைப்
பயன்படுத்த முடியாது.

நான் யார்?

6 கேள்வி 6

நான் உலகம் முழுவதும்
சுற்றுவேன்.

ஆனால் எப்போதும்
ஒரே மூலையில்
இருப்பேன்.

நான் யார்?

பதில்கள்

1. காலம்
2. ஊசி
3. குழி
4. மெழுகுவர்த்தி
5. முட்டை
6. தபால் தலை

நிழற்பதிவு

Both images are from the same scene. The first image is the original RAW camera image, while the second image is the edited version.

A decorative, illuminated wire tree against a bright, circular ceiling light.

Delicate silhouettes cradle a luminous moon against the velvet, starry night.

- Sivakumar


நிழல் நெஞ்சங்கள்
மௌனக் கவிதை
- மஞ்சயார்கவி

Real-World Assets (RWAs):
Bringing the Physical World onto the Blockchain

From gold and real estate to government bonds, Real-World Asset tokenization is transforming how we own, trade, and interact with valuable assets—digitally and globally.



OVERVIEW

Imagine owning a piece of a building, a gold bar, or a government bond, not physically, but as a digital token on the internet. That's exactly what Real-World Asset (RWA) tokenization is all about. It is one of the biggest trends in terms of global finance today, bridging the gap between traditional financial systems and the world of blockchain technology.



> "RWAs connect the real world to the blockchain—unlocking liquidity, transparency, and global access for everyone."

1 WHAT ARE REAL-WORLD ASSETS?

Real-World Assets are everyday financial assets that exist in the traditional world, things like bonds, commodities (oil, gold), currencies, and real estate, which are custodied and managed by banks and other financial institutions. These assets have always been valuable, but trading them was slow, expensive, and largely limited to wealthy or institutional investors.

2 HOW DOES TOKENIZATION WORK?

Tokenization is the process of converting these physical assets into digital tokens on a blockchain. Think of it like turning a gold bar into 1,000 digital "gold coins" – each coin represents a small share of that bar. Once a real asset is locked in secure custody, it gets represented as a verifiable on-chain token.

A critical part of this process is verification. Chainlink's Proof of Reserve (PoR) technology automatically checks that every token is truly backed 1:1 by the real asset it represents, ensuring no fraud, no hidden gaps. This verification is done transparently so anyone can confirm it at any time.

3 RWAS IN DEFI – WHY IT MATTERS

Once tokenized, these assets enter the world of Decentralized Finance (DeFi), where they can be traded, lent, or used as collateral across open financial platforms. This unlocks three major benefits for everyday people:

- **Deeper liquidity:** More buyers and sellers can participate globally, not just large institutions.
- **Faster settlement:** Transactions that once took days now settle in minutes on a blockchain.
- **Access to new markets:** Anyone with a smartphone can invest in assets that were once restricted to wealthy investors.

How Big Is This Market?

The RWA tokenization market has grown explosively. The total value of tokenized real-world assets on public blockchains surpassed **$30 billion** in 2026, up from roughly $5 billion just a year earlier, a growth of **over 420%.** Industry experts project the market could reach **$30 trillion** by 2030, making it one of the most significant financial innovations of the decade.



The Big Picture

RWA tokenization is essentially building a bridge between traditional finance and blockchain technology. Banks and financial institutions hold the real assets; the blockchain makes them accessible, transparent, and tradeable to everyone, regardless of location or wealth. It is not just a crypto trend; it is fast becoming the future infrastructure of global finance.

-KIRUBAKARAN

சொல்லுங்கள் வெல்லுங்கள்!
வாசகர்களுக்கான சிறப்புப் பரிசு!

அன்பான வாசகர்களே,

இந்த இதழை நீங்கள் ஆர்வத்துடன் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்கள் வாசிப்பு அனுபவத்தை இன்னும் சிறப்பாக்க, ஒவ்வொரு மாதமும் ஒரு எளிய கேள்வியுடன் கூடிய பரிசுப் போட்டி நடத்துகிறோம். இந்த மாத வெற்றியாளரை அறிவிப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மாதத்தின் **வெற்றியாளருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்!**





❓ இந்த மாதக் கேள்வி:

நம் நட்பேடு இதழில் "நிழல்" என்ற பெயரில் தொடங்கும் இரண்டு தொகுப்புகள் எவை?

உங்கள் பதில்களை, stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள் (email subject: Natpedu_Quiz2).

இந்த மாதம் வரும் அனைத்துப் பதில்களிலும் இருந்து குலுக்கல் முறையில் 2 வாசகர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும் 🎁✨ஆகவே, தவறவிடாமல் உங்கள் பதிலை அனுப்புங்கள்.

இந்தப் பகுதி தொடர்ந்து சிறப்பாக நடைபெற, இதில் அதிகமான வாசகர்கள் பங்கேற்பது மிகவும் முக்கியமானது. ஆகையால், இதில் இடம்பெறும் கேள்விகளுக்கு உங்கள் பதில்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பி, உற்சாகமாக கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். 📩

வாசிப்போம். எழுதுவோம். வெல்வோம்!!

இறுதியல்ல நிறைவு

வாழ்க்கையில் நாம் விரும்பியது கிடைக்காதபோது, எல்லாம் முடிந்துவிட்டது (The End) என்று எண்ணி மனம் சோர்ந்து விடுகிறோம். ஆனால், அந்த முடிவுதான் ஒரு உன்னதமான பயணத்தின் தொடக்கம். இதற்கு மிகச்சிறந்த சாட்சி, இந்தியாவின் ஏவுகணை நாயகன் அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கை.

கனவு கலைந்த நிமிடம்:
சிறுவயது முதலே ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்ற தீராத கனவுடன் வளர்ந்த கலாம், விண்வெளிப் பொறியியல் முடித்துவிட்டு, இந்திய விமானப்படையில் சேர விண்ணப்பித்தார். நேர்முகத் தேர்வின் முடிவில், மொத்தம் இருந்த 8 இடங்களில் அவர் 9-வது இடத்தை பிடித்தார். ஒரு சிறிய இடைவெளியில் தன் வாழ்நாள் லட்சியம் கைகூடாமல் போனதால், அவர் மிகுந்த ஏமாற்றமடைந்தார்.

புதிய விடியல்:
மனம் உடைந்த கலாம், ஹரித்வாரில் சுவாமி சிவானந்தரைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பு அவருக்கு ஒரு புதிய தரிசனத்தைத் தந்தது. "நீ விமானியாகவில்லை என்றால் வருந்தாதே; இறைவன் உனக்கென ஒரு பெரிய திட்டத்தை வைத்திருக்கிறான்" என்ற அறிவுரை அவர் மனதை மாற்றியது.

இறுதியல்ல... ஒரு உன்னத நிறைவு:
விமானியாகப் போக வேண்டிய கலாம், நாட்டின் பாதுகாப்புத் துறையில் விஞ்ஞானியாகப் பொறுப்பேற்று, 'அக்னி' போன்ற ஏவுகணைகளை உருவாக்கி இந்தியாவை வல்லரசாக்கினார். ஒருவேளை அவர் 8-வது இடத்தைப்பிடித்து விமானியாகி இருந்தால், அவர் ஒரு சிறந்த அதிகாரியாக மட்டுமே ஓய்வு பெற்றிருப்பார். ஆனால், அந்தத் தோல்விதான் அவரை இந்தியாவின் 11-வது ஜனாதிபதியாகவும், கோடி மக்களின் மனங்களை வென்ற தலைவராகவும் மாற்றியது.

வாழ்க்கைப் பாடம்:
இறுதி என்று நாம் நினைக்கும் பல தருணங்கள், உண்மையில் ஒரு பெரிய சாதனையின் கதவுகள் திறக்கப்படுவதற்கான "நிறைவு" மட்டுமே. லட்சியங்கள் திசை மாறலாம், ஆனால் உழைப்பும் நம்பிக்கையும் இருந்தால் நாம் அடையப்போகும் இலக்கு நாம் கற்பனை செய்ததை விடப் பிரம்மாண்டமாக இருக்கும்.

--- நன்றி! வணக்கம் ! ---

ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு

General Feedback

இம்மாத நட்பேடு இதழ் பற்றிய உங்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அவற்றை stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு
பதிப்பாளர்: மஞ்சுபார்கவி சுகுமாரன்